# உடன் உதவும் பயில்வுச் செயலட்டை
## க.பொ.உயர்தரம் - தமிழ் - சங்கப்பாடல் - 05 - நேரம்:30 நிமிடம்
## விடைப்பத்திரம்

**தயாரிப்பு :திரு.எ.த.ஜெயரஞ்சித்**
BA. (Hons), M.A. (Tamil), Dip.in.Edu. (Merit Pass),Dip.in.Office Administration (First class),
Dip.in.Tamil(Colombo Tamil sangam),Dip.in.School Management(NIE)

**01. மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின்கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

**(அ)** நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்
இளைய னிவனென வுளையக் கூறிப்
படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் யானையுந் தேரு மாவும்
படையமை மறவரு முடையம் யாமென்
றுறுதுப் பஞ்சா துடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத்தாக்கி முரசமொ
டொருங்ககப் படேஎ னாயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது
கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக
ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகவென் னிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கீயா வின்மையா னுறவே.

<u>வினாத்தொகுதி:01</u>

**(i) இப்பாடல் இடம்பெறும் திணையையும் துறையையும் விளக்குக.**

- **திணை** : காஞ்சி: வாழ்க்கையில் நிலையாமை பற்றிய கருத்துக்களான உடல், இளமை, செல்வம் முதலிய செய்திகளைக் கூறுவதாக பெரும்பாலும் இருபாலாருமுடைய வீரத்தைக் குறிக்கும்.
- **ஆண்பால் காஞ்சி:** போரில் புண்பட்ட தலைவன் அப்புண்ணோடு வாழ விரும்பாமல் போர் புண்ணைத்தானே வேலால், வாளால், கிழித்துப் போர்க்களத்தில் கிடந்து மாய்ந்து இறப்பதாகும்.
- **பெண்பால் காஞ்சி:** போர்க்களத்தில் புண்பட்டு இறக்கவிருக்கும் தலைவனை தலைவி கட்டித்தழுவ பிரிவுத்துயர் ஆற்றாமையினால் தலைவி பல வஞ்சினங்கள் கூறி தலைவனின் உடலைப் பாதுகாத்து அவன் இறந்த பின்பு அவளும் உடன்கட்டை ஏறி மாய்வதாகும்.
- **துறை** : **வஞ்சினக் காஞ்சி:** பகை அரசர் போர்க்களத்தில் எதிர்ப்படக் கூறிய புல்லிய வார்த்தைகளை (சிறுவார்த்தைகள்) பொறுத்துக்கொள்ளப்பெறாது, கடுங்கோபமுற்று (வஞ்சினங் கொண்டு) வெகுளியும் எள்ளலும் வெளிப்படுவதாகிய வஞ்சின வார்த்தைகளால் அமைவதாகும்.

**(04 புள்ளிகள்)**

**(ii) இப்பாடலில் பின்வரும் தொடர்கள் எவ்வெப் பொருள்கயில் கையாளப்பட்டுள்ளதெனக் குறிப்பிடுக.**

- நகுதககன்ர் - சிரிக்கத் தக்கார்
- மீக்கூறுநர˙ - மிகுத்துச் சொல்லுவார்
- உளையக் கூறுதல் - வெறுப்பச் சொல்லுதல்
- சிறுசொல் - புல்லிய இழிந்த வார்த்தை

**(04 புள்ளிகள்)**

**(iii) பாண்டியன் தலையாலங்கானத்து செருவென்ற நெடுஞ் செழியனை பகைத்த அரசர்கள் இழிவாகக் கூறிய வார்த்தைகள் யாவை?**

- 'இவனையும், இவன் ஆழும் நாட்டையும் உயர்த்திக் கூறுபவர்கள் நகைப்புக்கு இடமானவர்கள்'
- 'இவன் அரசியல் அனுபவம் இல்லாத இளையவன்'.
- 'நாம் ஒலியெழுப்பும் மணிகள் கட்டப்பட்டதும் பரந்த அடியோடு கூடிய பருத்த காலை உடையதுமான உயர்ந்த யானைப்படை,தேர்ப்படை, குதிரைப்படை, ஆயுதம் தாங்கிய காலாற்படை, என்பவற்றை உடையோம்' என செருக்குடன் கூறியமை.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:02</u>

**(i) இப்பாடலில் புலவர் வெளிப்படுத்த விளைந்த விடயத்தைக்குறிப்பிட்டு விளக்குக.**

- **தலையாலங் காலத்து செருவென்ற பாண்டியன் நெடுந் செரியனின் உள உறுதியும் வீரச் செழிப்பும் வெளிப்படுத்தப்பட்டது:** பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வம் விரமும் எனும் வகையில் தன்னை இழிவாகப் பேசியவர்கரைள போர்க்களத்தில் சிதறடித்து அவர்களையும் முரசங்களையும் கைப்பற்றுவேன் எனக் கூறுவதுடன் அவ்வாறு செய்யாமல் இருப்பேனாய் எனது குடி மக்கள் ''கொடுங்கோலன்'' ''என பழிதூற்றுதலுக்கு மாங்குடி மருதனை தலைவனாக உள்ள புலவர்கள் எனது நில எல்லையை பாடாது ஒழித்தலுக்கு எனது குடி மக்களின் இரப்போருக்கு அவர்களின் கண்சோருமாறு எதையும் கொடுக்க முடியாத வறுமை என்னை வந்தடைவதற்கும் உரியவன் ஆவேன்'' என்று கூறியவற்றை உணர்த்துகின்றது.

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடல் வெளிப்படுத்தும் விழுமியக்கருத்துக்கள் யாவை?**

- நாட்டை ஆளும் அரசன் ஒருவனிடம் தன்மான உணர்வும் வீரமும் இருத்தல்.
- குடிமக்களைப் பாதுகாப்பது ஓர் அரசனின் இன்றியமையாக்கடமை.
- இரந்து வந்தவர்களுக்கு பொருள் வழங்குவதனை உயர்வாகக் கருதல்.
- இரந்து வந்தவர்களுக்கு பொருள் வழங்க முடியாவிட்டால், இழிவு ஏற்படும் என்பதை உணர்தல்.
- புகழுக்கு உரியவராயின் உயர்வும் குடிமக்களின் பழிக்கு உள்ளாவதன் இழிவும் ஏற்படும் என்பதை உணரவேண்டும்.

**(04 புள்ளிகள்)**

**(iii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்சழியன் கூறிய வஞ்சின வார்த்தைகள்யாவை?**

- புன்மையான(இழிவான) வார்த்தைகளை பேசிய சினம் மிகுந்த அரசர்களைப் போரில் தாக்கி அழிப்பேன்.
- அவர்களது முரசங்களுடன் அவர்களையும் ஒரு சேரக் கைப்பற்றுவேன்.

- அவர்களை அழித்து வெற்றி கொள்ளேனாயின் எனது ஆட்சியில் வாழும் குடிமக்கள் சென்று வாழ்வதற்கும் பாதுகாப்பான வேறிடம் இன்மையால் ‘‘எங்கள் அரசன் கொடியவன்’’ என்று கண்ணீர் விட்டுப் பழி சொல்லித்தூற்றும் கொடுங்கோலன் ஆகுவேனாக.
- மேலான சிறப்பையும், உலகத்தாரின் போற்றுதலையும் உடைய அறிவிற் சிறந்த மாங்குடி மருதனை தலைவராகக் கொண்ட புலவர்களால் எனது நிலத்தின் எல்லையானது புகழ்ந்து பாடப்படாதது ஆகட்டும்.
- என்னால் பாதுகாக்கப் படுபவர்களின் வருத்தமுற்ற கண்கள் சோருமாறு இரப்பவர்களுக்கு எதனையும் வழங்க முடியாத வறுமை என்னை வந்து சேர்வதாக.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

<u>வினாத்தொகுதி:03</u>

**(i) ஓர் அரசனை இழிவுபடுத்தும் கீழ்மை உணர்வுகள் என நெடுஞ்செழியனின் உள்ளத்தில் ஊறி நின்றவை யாவை?**

- குடிமக்கள் பழிதூற்றும் கொடுங்கோன்மை.
- புலவர் பாடும் புகழ் பெறாமை.
- இரவலர்க்கு ஈயாமை.

**(04 புள்ளிகள்)**

**(ii) அரசர்க்கு உரியதாகக் கூறப்படும் சிறப்புகள் தொடர்பாக இப்பாடலில் வெளிப்படும் அம்சங்கள் யாவை?**

- தன்மான உணர்வும், வீரமும் உடையவராய் இருத்தல்.
- யானை, தேர், குதிரை,காலாற்படை, முதலிய நால்வகைப் படைகள் காணப்படுதல்.
- பகை வெல்லும் திறன் காணப்படுதல்.
- குடிமக்களை பாதுகாக்கும் கடமை உணர்வு இருத்தல்.
- செங்கோலனாக மக்களால் போற்றப்படுதல்.
- அறிவும்,புகழும், உடைய புலவர்களால் மன்னனும் அவன் ஆளும் நாடும் புகழப்படுதல்.
- இரப்போருக்கு ஈயும் கொடைப்பண்பு காணப்படுதல்.

**(04 புள்ளிகள்)**

**(iii) இப்பாடலில் வெளிப்படும் சங்ககால புறத்திணை மரபுகளை எடுத்துக்காட்டுக.**

- காஞ்சித்திணையில் வஞ்சினக்காஞ்சி வெளிப்படுமாறு பாடப்பட்டது.
- பாட்டுடைத் தலைவனின் பெயர் அல்லது இடம் அமையுமாறு பாடப்பட்டது.
- பகையரசர்களைப் போரிலே வென்று அவர்களை முரசத்துடன் ஒன்றாக கைப்பற்றுவேன் என வீரம் வெளிப்படுமாறு பாடப்பட்டது.
- அரசனின் புகழ் மற்றும் கொடை, தன்மான உணர்வு, படைச்சிறப்பு, என்பன வெளிப்பட்டன.
- தலையாலங் கானத்து பாண்டியன் நெடுஞ்செழியனின் கூற்றாக அமைந்தது.

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**

**வினாத்தொகுதி:04**

**(i) இப்பாடலில் உள்ள மேல்வரும் சொற்களின் பொருள்களை குறிப்பிடுக.**

- சமம் - போர்
- நிலைஇய - நிலைபெற்ற
- புரப்போர் - ஆதரித்துக் காப்பவர்
- புன்கண் - துயரம்

**(04 புள்ளிகள்)**

**(ii) பாடலில் வெளிப்படும் சங்ககாலத்து பண்பாட்டு அம்சங்கள் என நீர் கருதுபவை யாவை?**

= பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வுடனும் வீரத்துடனும் விளங்கினான்.

= குடிகளைப் பாதுகாத்தலில் ஓர் அரசன் கடமை உணர்வுடன் செயற்பட்டான்.

= இரந்து வந்தவர்களுக்கு ஈதலின் உயர்வும் ஈயமுடியாமையின் இழிவும் முதன்மையானவை.

= பெரியவர்களின் புகழுக்கு உரியவராவதன் சிறப்பும் குடிகளின் பழிக்கு ஆளாவதன் இழிவும் வலியுறுத்தப்பட்டன.

= அக்காலப் புலவர்கள் ஒரு தலைமையின் கீழ் ஓர் அமைப்பாக இயங்கிவந்துள்ளனர்.

= அரசர்களிடம் நால்வகைப் படை காணப்பட்டுள்ளன.

**(04 புள்ளிகள்)**

**(ii) தலையாலங் கானத்து செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் தன்மான உணர்வும், வீரமும் வெளிப்படுத்தும் விதத்தினை எடுத்துக்காட்டுக.**

- தலைமைத்துவம், இரப்போருக்கு கொடுக்கும் தன்மை முதலான பிற **சிறப்புகளால் அரசன் போற்றப்படுவதனூடாக,**
- **இம்மைப் புகழினை இழக்க நேரிடும் என்பதை எடுத்துரைத்து**
- புல்லிய வார்த்தைகளைக் கூறி தன்னை ஏளனம் செய்த பகை மன்னர்கள் செயல்கள் மீது **சினம் கொண்டு கண்டித்து,**
- யானை,தேர், குதிரை,காலாற் படைகளையும் உடையோம் என செருக்குற்று தன்னை ஏளன வார்த்தைகளால் பேசியவர்களை நோக்கி போரிலே சிதறும் படி தாக்குவேன் என **வஞ்சினம் உரைப்பதன் ஊடாக** தன் கருத்தை வெளிப்படுத்தி
- எதிரிகளை போரிலே தாக்கி அவர்களது முரசத்துடன் அவர்களையும் ஒன்றாக கைப்பற்றுவேன் என **தன் வீரத்தில் படை பலத்தில் நம்பிக்கையை வெளிப்படுத்தி**
- பகையரசர்களை அழிக்காவிடின், குடிமக்கள் பழி துற்றுங் கொடுங்கோலன் ஆகவும் புலவர்களால் பாடப்படாத நாட்டை உடையவனாகவும், இரப்போருக்கு ஈயாத வறுமை உடையவனாகவும் வாழ்வதால் இம்மைப் புகழினை இழந்து மறுமைப் புகழையும் அடையமுடியாது என **சபதம் செய்து**
- நாற்படை பணியரசர்களை போரிலே சிதறம் படி தாக்குவேன் எனும் வெகுளி அவையும், கவிஞர்களால் புகழப்படாமல் குடிமக்களால் பழிதூற்றப்படுவதால் **எள்ளல் சுவையும் வெளிப்படுமாறு தன்கூற்றினூடாக**

**(04 புள்ளிகள்)**

**(12 புள்ளிகள்)**